# இரட்சிப்பு ஜூன் 2026 யுனிகோடு



## இயக்குநர் கடிதம்...

FROM THE MISSION DIRECTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

2026ம் ஆண்டின் 6வது மாதத்திற்குள் நம்மை வழிநடத்திய நம் வீராதி வீரர் இயேசுவின் பாதம், பணிந்து தொழுவோம். இம்மாதம் 11ம் தேதி அப்போஸ்தலன் பரி. பர்னபாவின் திருநாள் (FEAST DAY OF APOSTLE ST.BARNABAS), 24ம் தேதி பரி. யோவான்ஸ்நானன் பிறந்தநாள் (THE NATIVITY OF ST. JOHN, THE BAPTIST), 29ம் தேதி அப்போஸ்தலர்கள் பரி. பேதுரு மற்றும் பரி. பவுல் ஆகியோரின் திருநாட்கள் (FEAST DAYS OF THE APOSTLES, ST. PETER AND ST. PAUL) ஆகிய திருநாட்களை ஆசரிக்கிறோம்; ஜெபத்துடன் ஆசரித்து, ஆசீர்வாதம் பெறுவோம்.

கோடை விடுமுறை முடிந்து, புதிய கல்வியாண்டு (NEW ACADEMIC YEAR) தொடங்கிவிட்டது. புதிய வகுப்பறைகளுக்குச் சென்றிருக்கும் நம் பிள்ளைகளுக்கு சுகம், பெலன், ஞானம் வேண்டும். தேவனிடத்தில் வேண்டுதல் செய்து ஞானவரங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள உற்சாகப்படுத்துவோம்.

ஜெப-ஜன்னல்-PWPM வேதாகம-போட்டிகள்-RBCS அனைவரும்-ஊழியத்தில்-AIMS ஆகிய திட்டங்களில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். பத்திரிக்கை ஊழியம், புத்தக வெளியீட்டு ஊழியம், வலைதள ஊழியம் (www.ratchippu.com), காணொலி-செய்தி ஊழியம், 'நல்ல-விதைகள்' கைப்பிரதி ஊழியம், NMS மிஷனரி ஊழியம், திருச்சபை ஊழியம் ஆகிய நமது ஊழிய இயக்குநரின் ஊழியங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ-சாட்சிகள், காணிக்கைகள் அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பவும். தகவல் தொடர்பு விபரம், வங்கி விபரம், UPI மற்றும் QR CODE ஆகியவை இப்பத்திரிக்கையின் 18வது பக்கத்திலும், நமது வலைதளத்திலும் உள்ளன. கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# இரட்சிப்பு இணைத் திருமறை

## (தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு)

வேத-வரிகள்-184 ஜூன் 2026 சங்கீதம்-68:24

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

பராபரனே, உம்முடைய நடைகளை கண்டார்கள்; என் பராபரனும் என் ராசாவும் பரிசுத்த ஸ்தலத்தில் நடந்து வருகிற நடைகளைத்தான் கண்டார்கள்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

தேவனே, உம்முடைய நடைகளைக் கண்டார்கள்; என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள்.

**திருவிவிலியம் (பொது-1995)**

கடவுளே! நீர் **பவனி செல்வதை கண்டனர்**; என் கடவுளும் அரசருமானவர் தூயகத்தில் **பவனி செல்வதை,** அனைவரும் கண்டனர்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

**வெற்றி ஊர்வலத்தை தேவன் நடத்துவதை பார்த்தார்கள்**. என் அரசராகிய பரிசுத்த தேவன் **வெற்றி ஊர்வலத்தை** நடத்துவதை ஜனங்கள் பார்த்தார்கள்.

# ஜெப-ஜன்னல் ஜெப-விண்ணப்பங்கள் - ஜூன் 2026

**கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - COME! LET US ALL INTERCEDE TO GOD**

1) அகில உலக சமாதானத்துக்காக... அமெரிக்கா-ஈரான், இஸ்ரேல்-ஈரான், உக்ரைன்-ரஷ்யா போர் கள் நிறுத்தப்பட... கம்போடியா-தாய்லாந்து, இஸ்ரேல்-சிரியா, இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தங் கள் மதிக்கப்பட... இலங்கை, பாகிஸ்தான், வங்கதேச பொருளாதாரம் சீரடைய... உலகம் முழுதும் எரிபொருள் விநியோகம் சீரடைய...

2) இந்திய மக்களுக்கு எதிரான மதவாத, பிரிவினைவாத சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறு பான்மை மக்களுக்குக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய நீதிமன்றங்கள் பாரபட்ச மின்றி நீதி வழங்க... ஒன்றிய அரசு ஜனநாயக நெறிமுறைகளையும் அரசியல் சாசனத்தையும் மதித்து நடக்க... இந்தியாவில் எரிபொருள் விநியோகம் சீரடைய...

3) தமிழ்நாட்டு மக்கள் இன - மத - மொழி பேதமின்றி ஒற்றுமை வாழ்வு வாழ... தமிழ்நாட்டில் தொழில்கள், வியாபாரம் செழிக்க... மத-வாத, பிரிவினை-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட... தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய...

4) திருமதி.சுந்தரிபாய் அவர்களின் முழு குடும்பமும் இரட்சிக்கப்பட...

5) திருமதி.சுமி ஜேஸ்மின், திருமதி.மெர்லின், திருமதி.பாக்கியா, திருமதி.திலகவதி மகேஷ், திருமதி.வைலட், திருமதி.சுதா, திருமதி.பிரியா சுதிர், திருமதி.புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

6) பிரி-கே.ஜி முதல் பள்ளியிறுதி வரை புதிய வகுப்புகளுக்கு சென்றுள்ள நம் பிள்ளை களின் ஞானத்துக்காக.... ஜெஃப்ரி S. ஆரோன், ஜேஃபியா S. அன்னா, ஆஷெர், ஜெரிக், ஜெர்லின், பிரியங்கா, ஷாலோம் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திருமதி.சார்டியஸ் தாவீது, திருமதி.சாரா பிரவீன் ஆகியோரது பேறுகால, தாய்-சேய் ஆரோக்கி யத்துக்காக... பாதுகாப்பான பிரசவத்துக்காக...


7) பிளஸ்-1, முதல் பி.ஹெச்.டி வரை, உயர்-கல்வி புதிய வகுப்புகளுக்கு சென்றுள்ள நம் பிள்ளை களின் ஞானத்துக்காக...... சிவா, கிளாட்சன், பார்வதி, பிரேம், ஜாஸ்மின், சிப்ரா, ஷிஃபியா, ஷெரின் டேவிட், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், ஜோயல், ஜெனிபர், சாம், சிந்தியா பிரகாஷ் ஆகிய நம் பிள்ளைகளுக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

8) சகோ.சவேரியம்மாள், திருமதி.ஈவ்லின் USA, திருமதி.செல்வி, திரு.லவ்ஸ்லி ஞானதாஸ், திருமதி.ஜேஸ்மின் ஞானதாஸ், திரு.அசரியா ஞானதாஸ், திருமதி.லீலா டேவிட், திரு.நெல்சன் (நகோமி), திரு.வெஸ்லி சாமுவேல், திரு.சுந்தர்சிங், திரு.அப்பன் டேவிட், திரு.ஜூலியன் ஆகியோ ரின் சரீர சுகத்திற்காக...

9) திருமதி.ராஜேஷ்வரி, Dr.ஷீபா, திரு.ஜெபனேசர், திருமதி.ஜரீன் வாக்கர், திருமதி.ஞானம் ஜெபராஜ், திருமதி.ஜலீன் செல்லத்துரை, திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

10) நமது ஊழிய ஆதரவாளர்களான Prof.மெர்லின் அசிஃபா, திரு.சார்ல்ஸ் சாலமோன், திருமதி. மெர்ஸி தனராஜ், அருட்திரு.பொன்சிங் சாமுவேல், திருமதி.தீபா மெர்சி கிறிஸ்டோபர், திருமதி. கிறிஸ்டி ஞானராஜ், திருமதி.சுகிர்தா சின்னதுரை, திருமதி.இந்திரா கெத்ஸி டேவிட், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி.வனஜா ஹெர்பர்ட், தி.ரு.J.R.டேவிட், திருமதி.ஜரீன் வாக்கர் திருமதி. ராணி சாமுவேல்ராஜ், திருமதி.ஷைனி ஜேம்ஸ், திருமதி.அரோமா சாத்ராக், திரு.சாம்சன் ஆபிரகாம், திரு. S.J.P.ராஜா, திரு.அசரியா ஞானதாஸ் ஆகியோரின் குடும்பங்களுக்காக...

புதிய கல்வியாண்டு: சிறப்பு தேவசெய்தி......



# ஞானத்தின் எதிரிகள்

உம்முடைய ஆலோசனையின்படி
நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை
மகிமையில் ஏற்றுக்கொள்வீர்.
சங். 73:24

## NEW ACADEMIC YEAR: THE ENEMIES OF WISDOM

Rev.S.J.D. Dharmaraja, Mission Director, Ratchippu Ministries, Saligramam, Chennai-93, South India

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வின் இனிய திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் ஜுன் மாதம் வந்துவிட்டது, புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியது, பள்ளிகள்-கல்லூரிகள் திறக்கப்பட்டுவிட்டன, மாணவர்கள்-ஆசிரியர்கள் மீண்டும் வகுப்பறையில் தங்கள் பணிகளை தொடங்கியுள்ளனர். இந்த சூழ்நிலையில் 'கற்பித்தல்-கற்றல் ஆகிய செயல்முறைகளில் கடவுள் தரும் ஞானத்தை மையப்படுத்துவது அவசியம்' என்கிற சிந்தனையை மனதில் கொண்டவர்களாய் சங்கீதம் 73ன் துணையுடன் 'ஞானத்தின் எதிரிகள்' என்ற கருப்பொருளில், பொறாமை, அசுத்தம், துர்-ஆலோசனை ஆகிய களைகளை அகற்றி ஞானம் என்னும் பயிரை எவ்வாறு அறுவடை செய்வது என்பரை வேதவசனங்களின் துணையுடன் தியானிக்க அழைக்கப்படுகிறோம்.

உலகத்தின் மீதிருக்கும் நம் கவனத்தை, கடவுளின் பிரசன்னத்தின் பக்கம் திருப்புவதில்தான் உண்மையான ஞானம் அடங்கியுள்ளது என சங்கீதம் 73 நமக்குக் கற்பிக்கிறது. **பிறர் மீதுள்ள பொறாமை காரணமாக சங்கீதக்காரரான ஆசாப்பின் விசுவாசம் இடறியபோது, அவர் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தார்;** இவ்விதமாய், 'தேவனுடைய அருகாமையே ஞானம் என்னும் வெகுமதி' என்பதை உணர்ந்து, தன் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டார்.

**1. 'பொறாமை' என்னும் ஞானத்தின் எதிரி: (வசனங்கள் 1-14)**

சங்கீதக்காரரான ஆசாப் தன்னைச் சுற்றிப் பார்த்தபோது, தீயவர்களின் சுகவாழ்வைக் காண்கிறார். அவர்கள், எந்தவித பின்விளைவுகளையும் சந்திக்காமல் ஆரோக்கியம், செல்வம், செல்வாக்கு ஆகிய உலகப்பிரகாரமான செழிப்பை அனுபவித்து வருவதைக்கண்டு அவர்கள் மீது அதிகமாக பொறாமை கொள்கிறார். மட்டுமல்ல, தான் கடவுளுக்குக் கீழ்ப்படிந்ததின் மதிப்பைக் குறித்துக் கேள்வி எழுப்பி, "நான் என் இருதயத்தைச் சுத்தமாக வைத்திருந்தது வீண்தான்" என்று புலம்பு கிறார். இங்கு பொறாமையானது களைபோல் வளர்ந்து அவரது ஞான-வளர்ச்சியை தடுக்கிறது. பொறாமை, அவருடைய ஞானத்தை சிதைத்தது. "சொஸ்தமனம் உடலுக்கு ஜீவன்; பொறாமையோ, எலும்புருக்கி" (நீதி.14:30) என்ற சாலோமோன் ஞானியின் நீதிமொழி, இங்கு எத்தனை அர்த்தம் நிறைந்ததாய் இருக்கிறது.

நம் வாழ்விலும், நாம் நமது வெற்றிகளை உலகப்பிரகாரமான செழிப்பினால் அளவிட்டு பிறர்மீது பொறாமை கொண்டு, தேவனுடைய கிருபையை இழந்து, அவர் நமக்குத் தந்த நன்மையான ஈவுகளை சந்தேகிக்கத் தொடங்குகிறோம். இன்று 'பொறாமை' என்பது, நாம் ஞானமடைவதற்கு தடையாய் இருக்கிறது என்பதை நம் குடும்பத்திலுள்ள ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் உணர்ந்து பொறாமையை விட்டொழிக்க அவர்களுக்கு உதவிசெய்வோம்.

**2. 'அசுத்தம்' என்னும் ஞானத்தின் எதிரி: (வச. 15-20)**

சங்கீதக்காரராகிய ஆசாப் தேவனுடைய பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்றபோது அவருடைய கண்ணோட்டம் முற்றிலும் மாறியது. கடவுளின் தூய பிரசன்னத்தில், 'துன்மார்க்கரின் கவலையற்ற வாழ்வு' எனும் மாயை தகர்க்கப்படுகிறது. அவர்களுடைய செழிப்பு தற்காலிகமானது என்றும், விழித்தவுடன் மறைந்துவிடும் ஒரு கனவைப் போன்றது என்றும் ஆசாப் உணர்ந்துகொள்ள முடிந்தது. அசுத்த உலகிலிருந்து பரிசுத்தமான கடவுளின் திருமுன் ஆசாப் சென்றபோது அவர் ஞானத்தைக் கண்டடைந்தார்.

இன்று நாமும் அசுத்தத்திற்கு விலகுவதன் வழியாய் பரிசுத்தத்திற்குள் நுழைந்து கடவுள் அருளும் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள நம் பிள்ளைகளையும் ஆசிரியர்களையம் உற்சாகப் படுத்துவோம். 'கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம' (சங்.111:10, நீதி.1:7) என்றும், 'கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும் நிலையானதுமாய் இருக்கிறது' (சங்.19:9) என்றும் வேதம் சொல்லுகிறது. எனவே, ஞானத்தை வாஞ்சிப்பவர்கள் அசுத்தம் நீக்கி பரிசுத்தத்ததில் நிலைத் திருக்க அழைக்கப்படுகிறார்கள். ஞானத்தைப் பெறுவதற்கு ஒரு நித்திய கண்ணோட்டம் தேவை; அசுத்தம், பொறாமை, மற்றும் கசப்புணர்வை நீக்கி, கர்த்தருடைய பரிசுத்தத்துக்குள் நம்மை கொண்டுவந்து, தேவஞானம் நம்மை வடிவமைப்பதற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**3. 'துர்-ஆலோசனை' என்னும் ஞானத்தின் எதிரி: (வச. 21-28)**

ஆசாப் தன் அறிவின்மையையும் புத்தியின்மையையும் உணர்ந்து, தன் கசப்புணர்விலிருந்து மனந்திரும்புகிறார். அவர் தனது ஆன்மாவை தேவனுடைய தொடர்ச்சியான ஆலோசனையிலும், வழிகாட்டுதலிலும் தமது இறுதி மகிமையிலும் நிலைநிறுத்துகிறார்: "ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன்; என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர். உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர். பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை." (வச.23,24,25).

உண்மையான ஞானம் என்பது பூலோகத்தின் துர்-ஆலோசனையில் அல்லாமல், அது தேவ ஆலோசனையில் கிடைக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் விதமாக சங்கீதக்காரர், "உம்முடைய ஆலோசனையின்படி நீர் என்னை நடத்தி, முடிவிலே என்னை மகிமையில் ஏற்றுக்கொள்வீர்." (சங். 73:24) என்று சொல்கிறார்.

இவ்வாறாக உலக மற்றும் மனித ஆலோசனைகள், தேஞானத்தை பெறுவதற்குத் தடையாக இருக்கிறதை சங்கீதக்காரர் சுட்டிக்காட்டுகிறார். ஆகவே, கடவுளின் அருகாமையே நாம் பெறக் கூடிய மிகப்பெரிய ஞானம் என்பதை உணர ஆசிரியர்களாக, மாணவர்களாக, பெற்றோராக நாம் அழைக்கப்படுகிறோம்.

அன்பானவர்களே! நாமும் நம் இருதயங்களை ஆராய்ந்து பார்ப்போம். நம் வாழ்க்கையை மற்றவர்களுடன் ஒப்பிட்டு, பிறருடைய ஆசீர்வதங்களின் மீது பொறாமை கொண்டு, அதனால்

நம் இருதயத்தில் மனக்கசப்பு பெருக அனுமதிக்க வேண்டாம். அழுக்கடைந்த உலகிலிருந்து, தூய்மை மிக்க கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்துக்குள் சென்றவுடன் தன்னுடைய மனக்கசப்பை, ஞானமின்மையை உணர்ந்த ஆசாப்பைப்போல் நாமும் நம் வாழ்வின் தூய நிலைக்குள் அடி யெடுத்து வைப்போம், நம் உள்ளத்தின் அழுக்குகளைக் களைந்துபோடுவோம். கடவுள் அருளும் தெய்வீக ஞானத்தைப் பொற்றுக்கொள்வோம்.

மட்டுமல்ல, கடவுளின் பிரசன்னத்தைத் தேடுவோம். ஜெபம் மற்றும் வேதவாசிப்பு மூலம் தேவபிரசன்னத்தில் தஞ்சம் புகுவதை பழக்கமாக்கிக் கொள்ளுவோம். இவ்விதமாக நாம் உலக மனிதர்களின் துர்-ஆலோசனைகளைத் தவிர்த்து. கடவுளின் தூய-ஆலோசனைகளை பெற்று, தேவஞானத்தைக் கண்டடைவோம்.

ஜெபம்: ஆண்டவரே! சக-மனிதர் மீதான என் பொறாமையை நீக்கிப்போடும். அசுத்த உள்ளம் கொண்ட என்னை அணைத்துக்கொண்டு, என் உள்ளத்தின் அழுக்குகளை நீக்கி உமது ஞானத்தால் அதை நிரப்பும். நீரே என் விருப்பமும் என் பங்குமாயிருக்கிறீர்; உலக ஆலேசனைகளை வெறுத்து உம்முடைய ஆலோசனைகளால் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள எனக்கு உதவிசெய்யும். இயேசுவின் நாமத்தில். ஆமென். கர்த்தர் உங்களை ஆசீர்;வதிப்பாராக.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் உழிய இயக்குநர்,
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை. தமிழ்நாடு, தென்னிந்தியா

==========================================================================

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள் - Good Tidings Bible-Prints Ministries**

# ‘நல்ல விதைகள்’ சுவிசேஷ கைப்பிரதிகள்

‘GOOD SEEDS’ GOSPEL TRACTS

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி (ONE BATCH) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். BATCH SPONSORSHIP செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்புகொள்ளுங்கள். கைப்பிரதிகளை SPONSOR செய்த தேவபிள்ளை களுக்கு எங்கள் நன்றி. எமது கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம். ஆமேன்.

---

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா

.========================================================================

வேத ஆராய்ச்சி ....

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்



சங்கீதம்-109 ஜூன் 2026 எப்பிசோடு-109

AUTHOR: Rev. Dr. D. SURESH RAJAN

**முன்னுரை**:

இது மிகவும் உணர்ச்சிபூர்வமான மற்றும் சிந்திக்க வைக்கும் சங்கீதங்களில் ஒன்றாகும். இது ஒரு 'சாப சங்கீதம்' (IMPRECATORY PSALM) என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில், இதில் எதிரிகளின்மேல் தீர்ப்பெழுத விரும்பும் விண்ண்பங்கள் இதில் உள்ளன. இச்சங்கீதத்தை எழுதியவர் தாவீது என்று பாரம்பரியமாக கருதப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலும் இந்த சங்கீதம் யூதாஸ் இஸ்காரியோத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. அப்.1:20ல் பேதுரு, சங்கீதம்-109:8ஐ மேற்கோள் காட்டுகிறார்: "அவனுடைய நாட்கள் கொஞ்சமாய் இருக்கக்கடவது; அவனுடைய உத்தியோகத்தை வேறொருவன் எடுத்துக் கொள்ளக்கடவன்." இதன் மூலம் தாவீது அனுபவித்த துரோகம், கிறிஸ்து வுக்கு எதிரான துரோகத்தின் முன்னறிவிப்பாகவும் பார்க்கப்படுகிறது. இச்சங்கீதம் துன்பம், ஜெபம், நீதி, மனித பலவீனம் மற்றும் கடவுளின் உண்மைத்தன்மை குறித்து முக்கியமான உண்மைகளை கற்றுத்தருகிறது. மேலும் இது கிருபை, மன்னிப்பு மற்றும் கடவுளின் நீதியில் நம்பிக்கை வைக்கும்படி அழைக்கிறது.

**1. உதவிக்கான தாவீதின் கூக்குரல்: (வச.1 - 5)**

"என் புகழ்ச்சிக்குரிய இறைவா, மௌனமாய் இராதேயும்." (வச.1). துன்பத்திலும் தாவீது கடவுளை 'புகழ்ச்சிக்குறிய கடவுள்' என அழைக்கிறார். சூழ்நிலை மோசமாக இருந்தாலும் ஆண்டவரை எப்பொழுதும் புகழ வேண்டும்.

"தீயோரும் வஞ்சனை செய்வோரும் எனக்கெதிராய்த் தம் வாயைத் திறந்துள்ளனர்... ...அவர்கள் காரணமின்றி என்னைத் தாக்குகின்றனர். நான் காட்டிய அன்புக்குக் கைமாறாக என்மேல் குற்றஞ்சாட்டினர்: நானோ, அவர்களுக்காக மன்றாடினேன்" (வச.2-4), என தாவீது தனது வேதனையை விளக்குகிறார். இதே செயலை இயேசுவும் செய்ததை, "பிதாவே, இவர்களை மன்னியும்; தாங்கள் செய்கிறது என்னவென்று அறியாதிருக்கிறார்கள்." (லூக்.23:34) என்ற வசனம் நமக்கு சொல்கிறது.

**2. வஞ்சனை செய்வோருக்கு எதிரான வேண்டுதல்: (வச.6 - 20)**

இது, இச்சங்கீதத்தின் மிகவும் கடினமான பகுதியாகும். இங்கு தாவீது, பொய்-குற்றச்சாட்டுகள், வெறுப்பு, துரோகம் மற்றும் அநீதி ஆகியவற்றால் வேதனைக்குட்பட்டு கடவுளை நோக்கி கதறுகிறார். இச்சங்கீதம், வெளித் தோற்றத்தில் மிக கடினமாக தோன்றும். குறிப்பாக எதிரிகளுக்கு தீர்ப்பு வரும்படி சொல்லும் பகுதிகள் மிகவும் கடுமையாக தோன்றும். சிலுவைக்கு முன்பு "கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்" என்ற நியதி இருந்த பழைய ஏற்பாட்டின் நாட்களில், இதுபோன்ற மொழிநடை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் ஆழமாக ஆராயும்போது, பழிவாங்கா மல் தன் வேதனையை கடவுளிடம் ஊற்றுகிற ஒரு விசுவாசியின் இருதயத்தை இங்கு நாம்

காண்கிறோம். பரிசுத்தம் என்பது உணர்வுகள் இல்லாத நிலை அல்ல; அது, எல்லா உணர்வுகளையும் கடவுளிடம் ஒப்புக்கொடுத்த நிலை ஆகும். தாவீது தனது வேதனையை கடவுளிடம் கொண்டு செல்கிறார். அவர் வன்முறையில் ஈடுபடாமல், தனது கோபத்தையும் வேதனை யையும் கடவுளிடம் வெளிப்படுத்துகிறார். அவர், தன் எதிரிகளை பழிவாங்க வில்லை. இங்கு, "பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன" என்ற வசனம், நினைவு கூரத்தக்கது (ரோம.12:19).

**3. இரக்கத்திற்கான வேண்டுதல்: (வச.21 - 29)**

இந்த பகுதியில் தாவீது மீண்டும் கடவுளின் இரக்கத்தை நாடுகிறார். "ஆனால், என் தலைவராகிய கடவுளே! உமது பெயரை முன்னிட்டு என் சார்பாகச் செயல்படும்! உமது பேரன்பின் பொருட்டு என்னை மீட்டருளும்!" (வச.21) தாவீது தன் நீதியைச் சொல்லிக்கொள்ளவில்லை. அவர் கடவுளின் இரக்கத்தையே நம்புகிறார். "நானோ எளியவன்: வறியவன்: என் இதயம் என்னுள் புண்பட்டுள்ளது. மாலைநேர நிழலைப்போல் நான் மறைந்து போகிறேன்: வெட்டுக் கிளியைப்போல நான் காற்றில் அடித்துச் செல்லப்படுகின்றேன். நோன்பினால் என் முழங்கால்கள் தளர்வுறுகின்றன: என் உடல் வலிமை இழந்து மெலிந்து போகின்றது. நானோ அவர்களது பழிச்சொல்லுக்கு உள்ளானேன்: ஆண்டவரே! என் கடவுளே! எனக்கு உதவியருளும்! உமது பேரன்பிற்கேற்ப என்னை மீட்டருளும்!" (வச.22-26) என்று அவர் தனது நிலையை விவரிக்கிறார். துன்பம் மனிதனின் மனதை, உடலை, சமூக உறவுகளை, ஆவிக்குரிய வாழ்வு என அனைத்தையும் பாதிக்கிறது. இப்படிப்பட்ட சூழநிலை யிலும் தாவீது இறைவனது உதவிக்காக வேண்டுதல் செய்கிறார்.

எலியா, எரேமியா, பவுல் ஆகிய தேவமனிதர்களும் மனச்சோர்வை அனுபவித்தனர். பரிசுத்த வாழ்வு என்பது பலவீனத்தை மறைப்பது அல்ல; கடவுளை சார்ந்து வாழ்வதாகும். கர்மேல் மலையில் பெரிய வெற்றிபெற்ற பிறகும் எலியா கர்த்தருக்குப் பயந்து மனமுடைந்தார் ஆகையால், கடவுள் அவருக்கு ஓய்வளித்து, உணவளித்து. உற்சாகமளித்து புதிய தரிசனத்தையும் அவருக்கு அளித்தார்.

**முடிவுரை:** (வச.30-31)

"என் நாவினால் ஆண்டவரைப் பெரிதும் போற்றிடுவேன்; பெரும் கூட்டத்திடையே அவரைப் புகழ்ந்திடுவேன். ஏனெனில், வறியோரின் வலப்பக்கம் அவர் நிற்கின்றார்: தண்டனைத் தீர்ப்பிடு வோரிடமிருந்து அவர்களது உயிரைக்காக்க நிற்கின்றார்." (வச.30,31)

இச்சங்கீதம் இறை புகழ்ச்சியோடு முடிகிறது. தாவீது தனது குறைகளில் தொடங்கி நம்பிக்கையில் முடிக்கிறார். காரணம், கடவுள் ஏழைகளின் பக்கத்தில் நிற்கிறார். மனிதர்கள் கைவிடலாம், நண்பர்கள் துரோகம் செய்யலாம், எதிரிகள் குற்றம் சாட்டலாம், ஆனால் கடவுள், தம் மக்களை கைவிடவேமாட்டார். இறையாசி உங்கள் அணைவரோடும் இருப்பதாக.

சங்கீதங்கள் கற்றுத்தரும்விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

---

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், தலைவர் (இந்திய மறை மாநாடு), குளோபல் மெத்தடிஸ்ட் திருச்சபை.

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CONFERENCE SUPERINTENDENT, INDIA ANNUAL CONFERENCE, GLOBAL METHODIST CHURCH IN INDIA.

==========================================================================

# வேதாகம போட்டி-187 (மே 2026 போட்டிகள்)

## சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் (திலை)
2) அமிர்தகனி பொன்ராஜ் (சென்)
3) ஏஞ்சல் C (திலி)
4) ஏஞ்சல் டார்வின் (கன்)
5) ஏஞ்சல் ராஜதுரை (சென்)
6) ஏஞ்சலின் யோசபாத் ராஜா (சென்)
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் (சென்)
8) அன்னாள் ஜெபக்கனி (கோய)
9) அனி பாய் ஜாண் (திலி)
10) அரோமா சாத்ராக் (திலி)
11) அருள்செல்வி ஜாண்ஸன் (திலி)
12) பெல்சி தங்கராஜ் (சென்)
13) பெனிட்டா பிராங்க்ளின் Dr. (சென்)
14) பியூலா ராஜசெல்வன் (கோய)
15) பிரீனா மேக்ஸின் தெபோரா (ராணி)
16) பிரிஸ்கில்லாள் பொன்ராஜ் (தென்)
17) செலினா வின்சென்ட் (திலி)
18) சந்திராபாய் மாசிலாமணி (சென்)
19) சந்திரலேகா (ஆபி)
20) சார்ல்ஸ் ஃபின்னி Dr. (சென்)
21) சார்ல்ஸ் சாலமோன் (புனே)
22) சார்லட் டேவிட் (சென்)
23) சித்ரா பெஞ்சமின் (திளு)
24) கிறிஸ்டல் ஜாய் யோபு (திதூ)
25) கிறிஸ்துதாஸ் (ஈரோ)
26) கிறிஸ்டி ஞானராஜ் (சென்)
27) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார்(தூத்)
28) கிறிஸ்டி பொன்னுசாமி (மது)
29) சிசிலி புஷ்பம் டேவிட் (சென்)
30) டெய்ஸி ஜெபதாஸ் (திசி)
31) டெய்ஸி சாம் (கன்)
32) டேனியல் தாமஸ் (திலி)
33) டேவிட் ஜே.ஆர். (திலி)
34) தெபோராள் D. (சென்)
35) தீபா மெர்சி கிறிஸ்டோபர்(சென்)
36) தேவகனி எமிலிசன் (சென்)
37) தேவகிருபை முத்து சகரியா (பாண்;)
38) தேவநேசம் ராஜாசிங் (சென்)
39) தேவபொன்மலர் ஜோனத்தான் (சென்)
40) டோராபாய் ஜூலியஸ்(சென்)
41) எபெனேசர் டேனியல் (கத்)
42) எபெனேசர் கிரேஸ்லின் சாந்தி (திலி)
43) எலிசபெத் அலெக்ஸாண்டர் (சென்)
44) எலிசபெத் செல்லத்துரை (சென்)
45) எப்சிபா ஜாண் (ராணி)
46) எஸ்தர் ஜெஸ்பர் (திலி)
47) எவாஞ்சலின் ஜோன்ஸ் Dr. (சேல)
48) கெத்ஸி தம்புராஜ் (பெங்)
49) குளோரி ரவீந்திரன் (திலி)
50) ஞானஜோதி பேரின்பம் (விரு)
51) ஞானம் ஜெபராஜ் (திலி)
52) ஞானம் பிலிப் (திபூ)
53) ஞான ரோஸ் G. (திளு)
54) ஞானசெல்வி மோசஸ் (அமெ)
55) ஞானசுந்தரி நாகராஜன் (திலி)
56) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் (சென்)
57) கிரேஸ் பிரின்ஸ் (தென்)
58) கிரேஸி கிறிஸ்டோபர் (சென்)
59) கிரேஸியா ஜெயபால் (சென்)
60) கிரிசெல்டா செய்லர் (சென்)
61) குணவதி ஜெபமணி (சென்)
62) ஹெலென் ஜான்சிராணி (திலி)
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் (சென்)
64) ஹெலென் I. (திளு)
65) ஹேமா அஜீத் (சென்)
66) ஹேமா கேப்ரியேல் (பெங்)

67) ஹெப்சி அசரியா (பாண்)
68) ஹிம்லா ராஜகுமாரி (சென்)
69) இளவரசி ஜோபிதா சுந்தரராஜன் (கோய)
70) இன்பவல்லி கலைச்செல்வன் (மது)
71) இந்திரா கெத்ஸி டேவிட் (திலி)
72) ஜமீலா செல்வராஜ் (சென்)
73) ஜமுனா K. (சென்)
74) ஜேன்ஸ் (ஜான்ஸி) (கோய)
75) ஜேன் தர்மராஜ் (திலி)
76) ஜான்ஸி சந்தியா (திலி)
77) ஜாஸ்மின் ஞானதாஸ் (சென்)
78) ஜாஸ்மின் ஜீவன் டேவிட் (மது)
79) ஜெபா ஜெயராஜ் (சென்)
80) ஜெபக்குட்டி மோசஸ் (திலி)
81) ஜெபரஞ்சிதம் மெர்லின் (தூத்)
82) ஜெனிலா S. (சென்)
83) ஜெரின் ஸ்டீபன் (மும்)
84) ஜெஸி செல்லதுரை (கோய)
85) ஜெஸி ஜெயக்குமார் (திலி)
86) ஜெஸிதா அகஸ்டின் (ஆபி)
87) ஜெயா அல்பர்ட் (தஞ்)
88) ஜெயசீலி மார்டின் (தூத்)
89) ஜோனா ஸ்டீபன் (சென்)
90) ஜாய்ஸ் பாண்டியன் (சென்)
91) ஜூலியட் அசோக் குமார் (தூத்)
92) ஜூலியட் ஜெபா (திலி)
93) ஜூலியட் ஜெயக்குமார் (திலி)
94) ஜஸ்டினா ஜெபராணி ராஜீவ் (அரி)
95) கலா கிருபாகரன் (திலி)
96) கலையரசி செல்வராஜ் (சென்)
97) கிருபாவதி எஸ். (சென்)
98) லதா மைகேல்ராஜ் (சென்)
99) லீலா டேவிட் (சென்)
100) லீலா ஜோஸப் (கோய)
101) லில்லி ஜாண்ஸன் (சென்)
102) லிஸி டென்சிங் (திலி)
103) லோவிசாள் ராஜேந்திரன் (தென்)
104) மல்லிகா ஜெபராஜ் (தூத்)
105) மல்லிகா V. (சென்)
106) மேபா ஞான சுகி (கன்)
107) மெஜிலா ஜோஷ்வா (தூத்)
108) மெர்ஸி ஃபுளோரா பாஸ்கர் (வேலூ)
109) மெர்ஸி ஸ்டீபன் (சென்)
110) மெர்லின் தேவராஜ் (சென்)
111) மெர்லின் சாமுவேல் (சென்)
112) மெரிட்டா ஜெயபாலன் (திசி)
113) மில்காள் சாம் (சென்)
114) முத்துமாலினி அலீஸ் (கோய)
115) நேச மாலா பீட்டர் (திலி)
116) நிக்ஸன் எவர்பிரைட் (திலி)
117) ஆலிவ் ஜெயபாலன் (கோய)
118) ஓலிவியா லேங்டன் (திசி)
119) பாக்யபாய் ஆரோன் (திலி)
120) பமீலா எட்வின் (கன்)
121) பிங்க்லின் சந்தோஷ் (சென்)
122) பொன்மணி உத்தமசிங் (சென்)
123) பிரேமா ஜானி (தென்)
124) பிரேமா ஸ்டாலின் (சென்)
125) பிரின்ஸ் தயாநிதி (சென்)
126) பிரிசில்லா சந்திரதாஸ் (சென்)
127) பிரிஸ்கில்லாள் சசி (கோய)
128) புனிதா ரவிநாத் (கோய)
129) ராஜபிரமீளா (திதூ)
130) ராஜ்மேரி சார்லஸ் (கேர)
131) ரமோலா அதிசயராஜ் (திலி)
132) ராணி பிரபாகர் (திலி)
133) ராணி சாமுவேல்ராஜ் (சென்0
134) ரத்னா டென்னிஸன் (சவு)
135) ரத்னாவதி பாண்டியன் (சென்)
136) ரியஸ்ஸி ஜாண் சிங் (கோய)
137) ரோஸி ஸ்டீபன் (சென்)
138) ரூபவதி நோபிள் (திலி)
139) ரூத் HAPP (திசி)
140) ரூத் ஜாண்ஸன் (திலி)

141) சலோமி மனோகர் Dr. (சென்)
142) சம்பு ஜெயச்சந்திரன் (மது)
143) சாரா பாலசிங் (மது)
144) சரோஜா செல்வராஜ் (சென்)
145) சரோஜினி எலிசபெத் (சென்)
146) செல்வ பென்சி ஆபேல் (ராணி)
147) செல்வராணி ஆல்பர்ட் (சென்)
148) செல்வி அமிர்தராஜ் (திளு)
149) செல்வி S. (சென்) (சென்)
150) செல்வின் S. (தூத்)
151) சாந்தி ஜெயசீலன் (சென்)
152) சாந்தி ரோஸ் (கோய)
153) ஷர்மீளா செல்வராஜ் (கட)
154) ஷீலா இஸ்ரேல் (திசி)
155) ஷெரீன் ஜெபராஜ் (திளு)
156) சில்வியா ஃபின்னி Dr. (சென்)
157) சவுந்;தரம் சாலமோன் (சென்)
158) சுகந்தி ஜெயச்சந்திரன் (கோய)
159) சுஜாதா சாமுவேல் (சென்)
160) சுசீலா தியோடர் (திசி)
161) சுவர்ணலதா அற்புதராஜ் (சென்)
162) தனசீலி ஞானராஜ் (சென்)
163) தெல்மா ஸ்டேன்லி (மது)
164) தியோடோர் (கோய)
165) உமா குளோரி (சென்)
166) உஷா ஜெபராணி SIS. H. (திளு)
167) வசந்தா அன்பன் (திலி)
168) வசந்தா சந்திரசேகர் (கோய)
169) வசந்தா துரைராஜ் (ஓஎப்டி)(திசி)
170) வசந்தா சேகர் (சென்)
171) வசந்தி கருணாகரன் (சென்)
172) வசந்தி வாசன் (சென்)
173) விஜயராணி A. (சென்)
174) விஜி டேனியல் (செங்)
175) விமலா ஜெயக்குமார் (தூத்)
176) வினோலியா ஜேம்ஸ் (தூத்)
177) வினோலியா பால் (மது)
178) வினோலியா வில்சன் (திது)
179) வைலட் கிறிஸ்டோபர் (திலி)
180) வைலட் சைரஸ் (திலி)

## வேதாகம போட்டி-187 மே 2026 போட்டிகள் (சங்கீதங்கள் 31-60, சரியான விடைகள்)

1. கற்பாறை,
   அரண் இரட்சிப்பு பக்-19
2. பராபரன். இரட்சிப்பு பக்-2
3. ஆழத்திலிருந்து வரும் தாவீதின்
   கூக்குரல் இரட்சிப்பு பக்-4
4. கர்த்தருடைய தூதன் சங். 34:7
5. பூமி சங். 33:5
6. கிருபை, சத்தியம் சங். 36:5
7. சரி சங். 41:1
8. சரி சங். 51:17
9. தவறு சங். 50:2
10. (ஆ) புயங்கள் சங். 37:17
11. (ஈ) பாழ்கடிப்புகளை சங். 46:8
12. (ஆ) மனுஷன் சங். 39:6
13. உன் தேவன் எங்கே?
    சத்துருக்கள்.
    சங். 42:3,9,10
14. கொடிய பலவந்தனான
    ஒரு துன்மார்க்கன் சங். 37:35,36
15. மதிகேட்டிநிமித்தம் சங். 38:5,6,7,8

# ‘அனைவரும் ஊழியத்தில்’

## ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

### இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு

1. **இத்திட்டத்தில் பங்குபெறுவோர்:** இரட்சிப்பு பத்திரிக்கையின் சந்தாதாரர்கள், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழிய் ஆதரவாளர்கள், வேதாகம போட்டியின் பங்காளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப பங்காளர்கள் ஆகிய அனைவரும்.

2.**நாங்கள் செய்வது:** மேற்கண்ட நமது ஊழிய ஆதரவாளர்களான உங்கள் அனைவருக்கும் வருடம் ஒருமுறை 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். ஒவ்வொரு காலண்டர் மாதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்ட 30 அன்பர்களுக்கு தபால் மூலம் கைப்பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

3. **நீங்கள் செய்யவேண்டியது:** நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், தூய்மை பணியாளர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு நல்கி நற்செய்தி பரவிட உதவுங்கள்.

**பின்-குறிப்பு:** இத்திட்டத்தில் பங்குபெற இயலாத நிலையில் இருப்பவர்கள் உங்கள் இயலாமையை வாட்ஸ்அப் மெஸேஜ் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்தலாம். எங்கள் வாட்ஸ்-அப் எண்: 9789914463.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================================

# ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூன் 2026

### ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்

நாள்: 12-06-2026 இரண்டாம் வெள்ளி

நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்

நாள்: 19-06-2026 மூன்றாம் வெள்ளி

நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை.

### ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்

நாள்: 26-06-2026 நான்காம் வெள்ளி

நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை.

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி “தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க” ஜெபித்ததைப் போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக் கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

==========================================================================================

# வேதாகம போட்டி-188 (ஜூன் 2026 போட்டிகள்)

**சங்கீதம் புத்தகம் - சங்கீதங்கள் 61 முதல் 90 வரை**

3 கேள்விகள் இரட்சிப்பு பத்திரிக்கையிலிருந்தும் (பக்கம் 2,4,5,6,19)

12 கேள்விகள் வேதாகமத்திலிருந்தும் கேட்கப்படுகின்றன

வேதவசன இருப்பிடம் - இரட்சிப்பு பத்தரிக்கை பக்கம் எண் அவசியம் எழுதவேண்டும்.
பதில்கள் அனுப்ப கடைசிநாள்: 25-06-2026

1. 'நடைகளைக் கண்டார்கள்' (சங்.68:24) என்பதை, இரட்சிப்பு இணைத் திருமறையில், திருவிவிலியம் மற்றும் பரிசுத்த-பைபிள் எவ்வாறு கூறுகின்றன?
2. சங்கீதம்-68ன் முடிவு என்ன?
3. பிறர் மீதுள்ள பொறாமையின் காரணமாக சங்கீதக்காரரான ஆசாப்பின் விசுவாசம் இடறியபோது, அவர்; செய்தது என்ன?
4. யுத்தநாளிலே முதுகு காட்டிய, ஆயுதமணிந்த வில்வீரர்கள் யாவர்?
5. யாருடைய ஆலோசனைசபையில், தேவன் மிகவம் பயப்படத்தக்கவர்?
6. தேவன் எழுந்தருளியிருப்பது எங்கே? அவர் நியாயம் விசாரிப்பது எங்கே?
7. 'பாசான் பர்வதம் உயர்ந்த சிகரங்களுள்ளது' - **சரியா தவறா?**
8. 'பொய் பேசுகிறவர்களின் வாய்; உடைக்கப்படும்' - **சரியா தவறா?**
9. 'கிருபையும் சத்தியமும் ஒன்றையொன்று நிந்திக்கும்' - **சரியா தவறா?**
10. கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு '**இதை**' பேசி, அடங்குவார்கள்:
அ) உண்மை ஆ) பொய் இ) வசனம் ஈ) இச்சகம்
11. தூதர்களின் அப்பத்தை '**இவன்**' சாப்பிட்டான்:
அ) யோசேப்பு ஆ) தாவீது இ) நீதிமான் ஈ) மனுஷன்
12. உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு '**இதை**' வழங்காதிரார்:
அ) நன்மையை ஆ) கிருபையை இ) சமாதானத்தை ஈ) ஆஸ்தியை
13. எழுபது அல்லது எண்பது, இது ஸ்பீடு அல்ல!
எதுவாயினும் இது கஷ்டம்தான், நஷ்டம் அல்ல!
எகிறி ஓடுது, ஏறிப் பறக்கிறோம், இது விமானம் அல்ல! இது என்ன?
14. ஒன்றும் இரண்டும் ஒன்றை-ஒன்று சந்திக்கும்!
மூன்றும் நான்கும் முந்திக்கொண்டு முத்தம் செய்யும்!
இரண்டு தரையில் முளைக்கும்! மூன்று வானிலிருந்து நோக்கும்!
ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, என்ன? இவை என்னென்ன?
15. கீசோன் நதிக்கரையில் வீழ்ந்தோம், அழிந்தோம்!
எந்தோர் என்னும் ஊரில் எருவாய் போனோம்!
நாங்கள் யார்? நாங்கள் யார்?

---

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி.ஜெயசீலி தர்மராஜா, எஃப்-1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை-93. வாட்ஸ்-அப்: 9789914463

===



## கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

ஆசிரியர்: சகோ. சி. ஏஞ்சல்

பாகம்-85 ஜூன் 2026 எப்பிசோடு-85

# புகழ்ச்சியானவர்

### (கர்த்தரே உன் புகழ்ச்சி)

### GOD OF THY PRAISE

### Elohei Tehillati

### எலோஹெய் தெஹில்லாட்டி

கர்த்தரே உன் புகழ்ச்சி; அவரே உன் தேவன். உபா.10:21

God is thy praise; and, He is thy God. Deu. 10:21

ஆக்கினைகளை அகற்றி, சத்துருக்களை விலக்கின இயேசு ராஜாவின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு ஜூன் மாத புகழ்ச்சியின் வாழ்த்துக்கள்.

**சங்.145:4** தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள். அவர் ஒருவரே பெரியவர், புகழப் படத்தக்கவர், ஆராய்ந்து முடியாத மகத்துவத்தை உடையவர் என்று அவரைப் பாடி, பணிந்து, பற்றிக்கொள்கிற உங்களைப் புகழ்ச்சியாக வைப்பார்.

**எபே.1:11-19** கிறிஸ்துவினுடைய தீர்;மானத்தின்படியே நீங்கள் முன்குறிக்கப்பட்டு, அவருடைய சுதந்தரமாகி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரைபோடப் பட்டீர்கள்; எனெனில், அவருக்குச் சொந்தமானவர்கள், அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுகிறார்கள். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையை, இயேசுவை விசுவாசிக்கிற உங்களிடத்தில் காண்பிக்கும் படிக்கு அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைத் தருகிறார்.

**எரே.33:9** நான் உங்களுக்குச் செய்யும் நன்மையையெல்லாம் கேட்கப்போகிற பூமியிலுள்ள எல்லா ஜாதிகளின் துதி, கர்த்தராகிய எனக்கு மகிழ்ச்சியுள்ள கீர்த்தியாயும், புகழ்ச்சியாயும், மகிமையாயும் இருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அல்லேலூயா!

**ஜெபம்:** சிறையிருப்பைத் திருப்புகிறவரே! உம்மைத் துதிக்கிறோம் (செப்.3;19,20). வெட்கத்தை அனுபவித்த சகல தேசங்களிலும் எங்களை புகழ்ச்சியாக வைக்கப்போகிறீர்; ஸ்தோத்திரம் ராஜா! இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே. ஆமென், அல்லேலூயா.

---

**தொகுப்பு: சகோ. சி. ஏஞ்சல் B.SC திருநெல்வேலி, தென்னிந்தியா**

==========================================================================

**தேன்-துளி வேத வசனக் கதைகள்**

(கதை-181 ஜூன் 2026)

ஆசிரியர்: சகோ. எம். அசரியா ஞானதாஸ் எம்.ஏ; எம்.எட்



# வேலயில் அஜாக்கிரதை வேதனைகளின் ஆரம்பம்

SCOTTLAND தேசத்தில், ஒரு பெரிய நீரோடை அருகில் ADAM என்;ற பெயருடைய ஒரு படகோட்டி வாழ்ந்து வந்தான். அந்த நீரோடையின் மறுகரையில் இருந்த சுற்றுலா மையத்துக்கு, இயற்கைக்காட்சிகளை கண்டு களிக்க உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பயணிகள் கூட்டம்கூட்டமாக வருவதுண்டு. நீரோடையை கடப்பதற்கு வசதியாக, வாடகை படகுகள் அங்கு இயக்கபட்டன. நியாயமான வாடகையில் பாதுகாப்பான சேவையை வழங்கி வந்த ADAM, பயணிகள் மத்தியில் மிக பிரசித்திபெற்ற ஒரு படகோட்டியாக திகழ்தான். ADAMஐ தேடி மக்கள் தினமும் கூட்டம் கூட்டமாக வருவதுண்டு.

குறிப்பிட்ட ஒரு நாளிலே, நகரத்தில் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் காரணமாக பயணிகள் யாரும் காலையில் வரவில்லை. பயணிகள் நெடுநேரம் வராததற்கான காரணத்தை அறியாத ADAM, அன்று தனக்கு வருமானம் வராததை எண்ணி நொந்து சோர்ந்து, வேதனை அடைந்தவனாய், தன் படகை ஒரு மரத்தில் கட்டிவிட்டு படகில் படுத்து அயர்ந்து தூங்கிவிட்டான்.

இந்நிலையில் 3மணி நேரம் தாமதமாக மதியத்தில் வந்த பயணிகள், ADAMஐ தேடியும் காணாததால் மற்ற படகோட்டிகளின் படகுகளில் ஏறி அக்கரைக்கு சென்றனர். இந்நிலையில், நீரோடையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால், ADAM தூங்கிக்கொண்டிருந்த அவனது படகைக் கட்டியிருந்த கயிறு கொஞ்சம் கொஞ்சமாக நெகிழ்ந்து, படகு நீரோடையின் மையத்துக்குச் சென்று நீர்ச்சுழியில் சிக்கி விபத்துக் குள்ளானது. விபத்தில் இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு, ஒரு வருடம் சிகிச்சைக்குப் பின்னரே ADAM மீண்டும் தன் பணியை தொடரும் நிலை ஏற்பட்டது.

பிரியமானவர்களே! பயணிகள் வராததுபற்றி தீரவிசாரிக்காமல் அஜாக்கிரதையாய் இருந்ததால் ADAM, பேரிழப்பை சந்திக்க நேர்ந்தது. நம் வாழ்வில், நாமும், பல நேரங்களில் தேவசித்தம் உணராமல் நம் இஷ்டப்படி செயல்படுவதால் எண்ணற்ற துயரங்களைச் சந்திக்கிறோம். எல்லா நிலைகளிலும் தேவசித்தப்படி நாம் செயல்படும்போது, அளவற்ற ஆசீர்வாதங்களுடன் மேலான வாழ்வு வாழமுடியும். வேதம் இவ்வாறு சொல்லுகிறது:

உண்மையாய் நடக்கிறவர்களோ கர்த்தருக்கு பிரியம். நீதி-12:22

என் உண்மையில் பிசகாமல் இருப்பேன். சங்-89:33

உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களை பெறுவான். நீதி-28:20

---

**M.AZARIAH GNANADOSS M.A, M.ED**

**EDITOR, RATCHIPPU TAMIL CHRISTIAN MONTHLY, SALIGRAMAM, CHENNAI-93. MOBILE:9962924900**



இந்திய கிறிஸ்தவ திருச்சபை சரிதை

(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு
# 2ம் வருகைக்குத் தயாராகு

தொகுதி-9 பகுதி-6 எப்பிசோடு-47 ஜூன் 2026

கட்டுரை ஆசிரியர்: அறிவர். திருமதி. சலோமி மனோகர்

**9. இந்திய கிறிஸ்தவம் 17ம் நூற்றாண்டு:**

**6. எழுத்துப்பணி மற்றும் மிஷன் பணிகள்:**

**எழுத்துப்பணி:** இந்தியாவிற்கு வந்த இத்தாலிய ஜேசுவைட் மிஷனரி ராபர்டோ டி நோபிலி, தமிழ் மற்றும் லத்தீன் மொழிகளில் ஒரு சிறந்த எழுத்தாளராக இருந்தார். தமிழ் இலக்கியத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்த ஒரு கிறிஸ்தவ மதகுரு நோபிலி ஆவார். மேலும், தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, அதன் மூலம் கிறிஸ்தவ மத கொள்கைகளையும் பரப்பினார். குறிப்பாக, தனது மத பரப்பு பணிக்காக மத நூல்கள் மற்றும் வழிபாட்டு முறைகளில் உள்ள சொற்களைப் பயன்படுத்துவதற்கு முன்னோடியாக இருந்தார்.

தமிழ் சொற்களின் பயன்பாடு: கோவில் (தேவாலயம்), அருள் (அருள்), பிரசாதம் (பிரசாதம்), குரு (பூசாரி), வேதம் (வேதம்), பூசை (பூசை) போன்ற பல தமிழ் சொற்களை கிறிஸ்தவ வழிபாட்டு முறைகளில் அறிமுகப்படுத்தினார். இந்திய பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளுக்கு ஏற்ப கிறிஸ்தவத்தை தமிழ் பார்வையாளர்களுக்கு விளக்குவதையே அவரது எழுத்துக்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன.

**உரைநடை இலக்கியம்:** நோபிலி, தமிழ் உரைநடை இலக்கிய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தார். அவர் பல உரைநடை நூல்களை, குறிப்பாக கிறிஸ்தவம் பற்றிய உரைநடை நூல்களை தமிழில் எழுதினார். அவற்றில் ‘கிறிஸ்தவ வேதோபதேசம்’ ‘ஞானோபதேசம்’ (கேட்டிகிசம்) போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கவை. அவரது குறிப்பிடத்தக்க படைப்புகளில் ஒன்று தமிழ் கிறிஸ்தவ இறையியல் மற்றும் தத்துவ ஆராய்ச்சியான ~நித்திய சீவன சல்லாபம்| எனப்படும் நித்திய ஜீவன் பற்றிய உரையாடல். சுமார் 40 புத்தகங்களை எழுதியுள்ள டி நோபிலி தமிழ் உரைநடையின் முன்னோடியாக கருதப்படுகிறார்.

மொழிபெயர்ப்பு: திருக்குறள், திருவாசகம், நாலடியார் போன்ற தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**தன்நிலை விளக்கம்:** சமய மற்றும் சமுதாய பிரிவினை மற்றும் பிளவு குற்றச்சாட்டுகளுக்கு ஆளான நோபிலி, தனது சர்ச்சைக்குரிய மிஷனரி (மதபரப்பு) அணுகுமுறைகளைப் பாதுகாக்க, தனக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்கும் ‘ரெஸ்பான்சியோ’ (முதல் மன்னிப்பு என்றும் அழைக்கப்படுகிறது) போன்ற ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்

பிற்கால ஆண்டுகளின் மிஷன்-பணிகள்: தொடர்ச்சியான எதிர்ப்புகளின் மத்தியில், அவரது அணுகு முறைகளுக்கு அங்கீகாரத்தைப் பெற செய்யப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. கி.பி.1623முதல் கி.பி.1647 வரையில் நோபிலிலின் போராட்டம் அதிகரித்தபோதிலும், ஜேசுயிட் செயல்பாட்டு மையங்களிலிருந்து அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படவே, நோபிலி தனிமைப் படுத்தப்பட்டார்; சில பகுதிகளில் நோபிலியின் ஊழியம் தடைசெய்யப்பட்டது.

கி.பி.17ம் நூற்றாண்டின் முதல் பாதியைவிட இரண்டாம் பாதியில் மதுரை மிஷனின் வரலாற்றிற்கான சான்றுகள் குறைவாகவே உள்ளன. விமர்சன ரீதியாக பார்த்தால், ஆய்வுகள் மிகக்குறைவாகவே செய்யப்பட்டுள்ளன. மட்டுமல்ல, கிறிஸ்தவ பக்தி சூழ்நிலை முற்றிலும் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜேசுயிட் ஒழுங்கில், ஒரு வேட்பாளர் கூட இல்லாத நிலையில் கி.பி. 1773ல்; அது கலைக்கப் பட்டது, குருத்துவம், மத தந்தையர்களால் முன்வைக்கப்பட்டது. கி.பி. 16ம் நூற்றாண்டில் மதம் மாற்றப்பட்ட பீட்டர் லூயிஸ் (பிராமணர்), இயேசுவின் சங்கத்தில் அனுமதிக்கப்பட்டார் என்பது உண்மைதான். ஆனால், அவருக்குப் பிறகு கி.பி. 19ம் நூற்றாண்டு வரை வேறெவரும் சேர்க்கப்படவில்லை. இந்தியாவில் பாரம்பரிய குருத்துவத்திற்கு பிரம்மச்சாரி வாழ்க்கை ஒரு பெரிய தடைக்கல் எனலாம். ஏனெனில் இந்தியர்கள் பொதுவாக இளம் வயதிலேயே திருமணம் செய்துகொள்வார்கள். ஜேசுயிட்கள் தென்னிந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது, அவர்களின் இடத்தைப் பிடிக்க நன்கு பயிற்சி பெற்ற இந்திய பாதிரியார்களின் குழு இல்லை.

**டி நோபிலியின் மரணம்:** மோதல்கள் மற்றும் போர்த்துகீசியப் போர்கள் காரணமாக, டி நோபிலி மதுரையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கும், பின்னர் மைலாப்பூருக்கும் மாற்றப்பட்டார். அவர் தனது கடைசி எட்டு ஆண்டுகளை அங்கேயே கழித்தார். கடுமையான சைவ உணவு உட்பட தனது கடுமையான வாழ்க்கை முறையை முடிவு வரை பராமரித்தார். ஆரம்பத்தில் வெற்றி இருந்தபோதிலும், ஜேசுயிட் வரிசையில் ஓரங்கட்டப்பட்ட ஒரு நபராக இருந்த நோபிலி, உடல் நிலை குன்றி, பார்வையற்றவராக, மிகுந்த வறுமையில் கி.பி. 1657 ஜனவரி 16ம் நாள் தனது 79 வயதில் மைலாப்பூரில் இறந்தார். இந்து மற்றும் கிறிஸ்தவ மதங்களுக்கிடையிலான இடைவெளியைக் குறைக்கும் வகையில், குறிப்பிடத்தகுந்த பல மதமாற்றங்களை ஊக்குவித்த டி நோபிலியின் முயற்சிகள், போற்றுதலுக்கும் தூற்றுதலுக்கும் வழிவகுத்தன. கி.பி. 17ம் நூற்றாண்டின் இந்தியாவில் கிறிஸ்தவ மிஷன்களின் பரந்த சூழலிலும், ஜேசுயிட் ஒழுங்கிற்குள்ளும், கலாச்சார உத்திகளின் வளர்ச்சியிலும் நோபிலி பெரிய தாக்கத்தை ஏற்படுத்தினார் என்றால், அது மிகையல்ல.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்......

---

AUTHOR: DR. MRS. SALOMI MANOHAR M.A, M.PHIL, P.HD ASSISTANT PROFESSOR (RTD),
(POPE'S COLLEGE, SAWYERPURAM) THIRUVANMIYUR, CHENNAI-41, SOUTH INDIA

==========================================================================

# DETAILS ABOUT US

**OUR CONTACT DETAILS:**

MOBILE: 9962924900/7871676100

WHATSAPP: 9789914463/7871676100

E-MAIL: sjddharmaraja@gmail.com

OUR WEBSITE: www.ratchippu.com

POSTAL ADDRESS: REV. S.J.D. DHARMARAJA,

MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST.,

GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

ADDL. E-MAIL: ratchippuratchippu@gmail.com

**OUR BANK DETAILS:**

NAME: DHARMARAJA SJD.

S.B. ACCOUNT NO: 601071548.

BANK & BRANCH: INDIAN BANK, NESAPAKKAM

IFSC CODE: IDIB000N122.

BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.

**OUR UPI DETAILS:**

UPI NAME: GOOGL-PAY (G-PAY)

UPI ID: sjddharmaraja@okhdfcbank

NAME: REV. DHARMARAJA SJD

G-PAY NUMBER: 9789914463

**OUR QR CODE**

Rev. Dharmaraja S.J.D

UPI ID: sjddharmaraja@okhdfcbank

Scan to pay with any UPI app

==========================================================================================

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES

(GOOD SEEDS TRACTS - நல்ல விதைகள் கைப்பிரதிகள்)

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 22 வகையான நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை, கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியின் ஒரு தொகுதியை (BATCH SPONSORSHIP) வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை SPONSOR செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு, சென்னை-93. தென்னிந்தியா.

==========================================================================================
==========================================================================================



# வசன தியானம்

ஆசிரியர்: Rev. S.J.D. தர்மராஜா,

ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள்,

தியானம்-170 ஜூன் 2026

## கடவுளின் கம்பீர நடை

### சங்கீதம்-68

### வல்லமையும் மாட்சிமையும்

தேவனுடைய நடைகளை கண்டார்கள்; என் தேவனும் என் ராஜாவும் பரிசுத்த ஸ்தலத்திலே நடந்துவருகிற நடைகளையே கண்டார்கள். சங்.48:14.

சங்கீதம்-68, கடவுளின் கம்பீரமான நடையை விவரிக்கும் ஒரு பாடல் இது. கடவுள் எழுந்தருளும்போது, எதிரிகள் புகைபோல் கலைந்து, மெழுகுபோல் உருகி அழிவார்கள் என்று சொல்லி, கடவுளை ஆதரவற்றோரின் பாதுகாவலராக போற்றுகிறது. மட்டுமல்ல, கடவுளின் தெய்வீக வல்லமை மற்றும் ராஜரீக மகத்துவத்தின் மீது கவனம் செலுத்த நம்மை அழைக்கிறது.

**ஆதரவற்றோரின் பாதுகாவலர்:** (வச.5,6) “தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்கு தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார்.” கடவுள் தூரத்திலுள்ள, அணுக முடியாத, ஒரு ஆட்சியாளர் அல்ல; அவர் ஒடுக்கப்பட்டவர்கள் மீது அக்கறை உடையவர். நாம் ஒடுக்கப்படும்போது அல்லது கைவிடப் படும்போது அவருடைய இதயம் நமக்காக இளகுகிறது. உடைந்துபோன குடும்பங்களையும் சமூகங்களையும் சீர்செய்வதில் அவர் வல்லவர்.

**பாரம் சுமப்போரின் உதவியாளர்:** (வச.19) “நம்மேல் பாரம் சுமத்தினாலும், இட்சிக்கிற தேவன் அவரே” நம் வாழ்வின் பாரங்களை, கவலைகளை, பொறுப்புகளை நாம் தனியாகச் சுமக்க வேண்டியதில்லை. இவ்வசனத்தில் ‘எந்நாளும்’ என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அவருடைய கிருபை என்பது ஒருமுறை நிகழும் நிகழ்வல்ல, மாறாக அது வருடத்தின் 365 நாட்களிலும் நம்மைத் தொடரும் பெலனாகும். ஆகவே, நம் மன அழுத்தங்களை இப்பொழுதே கடவுளின் வல்ல கரங்களில் ஒப்படைத்து மகிழுவோம்.

**வல்லமை-மாட்சிமை நிறைந்தவர்:** (வச.7, 8) “தேவனாகிய உமக்கு முன்பாக பூமி அதிர்ந்தது; வானமும் பொழிந்தது; இஸ்ரவேலின் தேவனுக்கு முன்பாக இந்தச் சீனாய்மலையும் அசைந்தது.” தேவன் இஸ்ரவேலரை வனாந்தரத்தின் வழியே வழிநடத்தி, வறண்டதும் சோர்வுற்றதுமான நிலங்களில், அவர்களுக்குத் தேவையானவற்றை அளித்தது போலவே, அவர் உங்களுக்கு முன்பாகவும் தீவிரமாகச் சென்றுகொண்டிருக்கிறார். வானங்களுக்கு மேலாக உயர்ந்த அவருடைய மாட்சிமை மகத்துவத்தின் முன்பாக எந்தத் தடையோ, நெருக்கடியோ, பிரச்சனையோ கடினமானதே அல்ல என்பதை, ‘பூமி-அதிர்ச்சி’ உருவகம் நமக்கு நினைப்பூட்டுகிறது.

**சங்கீதம்-68ன் முடிவு ‘துதி’ ஆகும்**. ‘தேவனுக்கு ஸ்தோத்திர முண்டாவதாக’ என சொல்வதே நம் உண்மையான பெலனாகும். இதை உணர்ந்து, கடவுள் மீதான நம் கண்ணோட்டத்தை சீர் படுத்துவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

---

அருட்திரு. தர்மராஜா, ஊழிய இயக்குநர், இரட்சிப்பு ஊழியங்கள், சென்னை-93, தென்னிந்தியா

==========================================================================

# செய்தித்துளிகள் ஜூன் 2026

1. இந்தியா உட்பட்ட 93 நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் விசா இன்றி தாய்லாந்து நாட்டில் தங்குவதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகாலம், 60 நாட்களிலிருந்து 30 நாட்களாக குறைக்கப் பட்டதாக தாய்லாந்து சுற்றுலலத் துறை அறிவிப்பு.
2. எத்தனாலை எரிபொருளாகக்கொண்ட புதிய கேஸ் அடுப்பு சந்தைக்கு வருகிறது. எல்பிஜி கேஸ் போலவே இதில் எத்தனால் எரிகிறது. இது மலிவானது, பாதுகாப்பானது மற்றும் மாசற்றது என ஒன்றிய அமைச்சர் நிதின் கட்கரி தகவல்.
3. தமிழ்நாட்டில் புதிய அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து, கடந்த ஆட்சியில் நியமிக்கப்பட்ட 162 அரசு வழக்கறிஞர்கள் ராஜினாமா செய்தநிலையில், அவர்களுடைய ராஜினாமாக் கள் தமிழ்நாடு அரசால் ஏற்றுக்கொண்டுள்ளன.
4. இந்தியாவின் முதல் விண்வெளி தொழில்நுட்ப தனியார் நிறுவனமான 'ஸ்கைரூட்' நிறுவனத் தால் ரூ.10,000 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட 'விக்ரம்-1' ராக்கெட், ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தி லிருந்து இம்மாத இறுதியில் ஏவப்படுகிறது.
5. ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவுகளில் தலா 16 அணி கள் பங்குபெறும் 16வது உலகக்கோப்பை ஹாக்கி வரும் ஆக.15முதல் ஆக.30வரை பெல்ஜியம்-நெதர்லாந்தில் நடை பெறுகிறது. இதற்கான அட்டவணை வெளியிடப்பட்டது.

==========================================================================================

# புதிய கல்வியாண்டு 2026 நல்வாழ்த்துக்கள்

அன்பிற்கினிய இரட்சிப்பு பத்திரிக்கையின் வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலகப்பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்து திருச்சபை இறை மக்கள், அச்சக மற்றும் தபால்-துறை நண்பர்கள் ஆகிய உங்கள் அனைவரின் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாருக்கு எங்கள் உள்ளங்கனிந்த புதிய கல்வியாண்டு நல்வாழ்த்துக்கள்.

நல்வாழ்த்துக்கள்..

இரட்சிப்பு
ஊழிய-குடும்பத்தார்

